**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 284/2008**
**நாள்.21.08.2023**
**வா.சா.3- பிச்சன்**
**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். 2ம் வாதி நாச்சம்மாள் எனது மனைவி. 2ம் பிரதிவாதி மூக்கனம்பலத்தின் மகள் குப்பம்மாள் என்பவர் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.261/2008 என என்னை 1ம் பிரதிவாதியாக காட்டி, எனது மனைவி நாச்சம்மாளை 2ம் பிரதிவாதியாக காட்டியும் மற்றும் 7 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, 19.03.2009ம் தேதி தீர்ப்பு பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த வழக்கில் நாங்கள் Exparte ஆக இருந்தோம். மேற்படி வழக்கும் இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.261/2008ல் உள்ள சொத்துக்களும் இந்த வழக்கின் சொத்துக்களும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.261/2008ல் உள்ள சொத்துக்கள் குப்பம்மாளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றாலும், இவ்வழக்கு சொத்திற்கு அது சம்பந்தம் இல்லாதது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. ஆண்டி பெருமாள் அம்பலத்திற்கு குப்பம்மாள் என்ற குப்பாயம்மாள் என்பவர் மனைவி என்றால் சரிதான். மேற்படி ஆண்டி பெருமாள் அம்பலம், குப்பம்மாள் என்ற குப்பாயம்மாள் தம்பதியினருக்கு நாச்சம்மாள், பெருமாள், ராமன் அம்பலம், ஆண்டியம்மாள், பெருமாள், சின்னம்மாள், ஆகியோர்கள் மக்கள். ராமன் அம்பலத்தின் முதல் மனைவி நாச்சம்மாள். மேற்படி ராமன் அம்பலம், நாச்சம்மாளுக்கு 1ம் வாதியும், முருகன் அம்பலமும் வாரிசுகள். ராமன் அம்பலத்தின் இரண்டாம் மனைவி பெருமாயி என்பவரின் மகன் 2ம் பிரதிவாதி ஆவார். 1ம் வாதி அவரது தாய்மாமனான பெருமாள் அம்பலத்தை தான் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். 3ம் வாதி ஆண்டி பெருமாள் அம்பலம், 2ம் வாதியின் உடன் பிறந்த சகோதரர் இல்லை என்றால் சரிதான்.

2. எனது மனைவியான 2ம் வாதியான நாச்சம்மாளுக்கு 2ம் பிரதிவாதி தாய்மாமன் உறவுமுறை என்றால் சரிதான். 10.09.1970ம் தேதிய ஈடு பத்திரத்தில் நான் சாட்சியமாக கையொப்பம் செய்யவில்லை. மேற்படி ஈடு இலாப கடன் பெற்ற ஆறுமுகம் பிள்ளை என்பவர் புத்தூர் கிராமத்தில் தான் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். வாதி, பிரதிவாதிகளின் குடும்பத்தை பற்றி ஆறுமுகம் பிள்ளைக்கு தெரியும். 10.09.1970ம் தேதி வா.சா.ஆ.2 ஈடு ஆவணத்தை குப்பம்மாள் என்ற குப்பாயம்மாள் எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. ராமன் அம்பலம், குப்பம்மாள் ஆகியோர் ஈடு இலாப பத்திரத்தை எழுதிக்கொடுத்தார்கள். 14.11.1970ம் தேதி 2ம் பிரதிவாதிக்கு அவரது பாட்டியான குப்பம்மாள் என்ற குப்பாயம்மாள் சர்வே எண்.431/1ல் 29 சென்டும், சர்வே எண்.532ல் 1 ஏக்கர் 60 சென்ட் நிலத்தை தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எழுதிக் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணம் எழுதப்பட்ட சமயத்திலேயே அதன் விபரம் எனக்கு தெரியும். அந்த ஆவணத்தை பொறுத்து வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என இவ்வழக்கில் பரிகாரம் எதுவும் கேட்கப்படவில்லை என்றால் சரிதான்.

3. 25.07.1973ம் தேதிய வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி 1ம் வாதி குப்பம்மாள் அவரது தம்பி முருகன் அம்பலத்திற்கு தாவா சொத்துக்களில் சிலவற்றை பொறுத்து தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டால் அதை நீதிமன்றம் மூலமாக தான் ரத்து செய்ய இயலும் என்ற விபரம் எனக்கு தெரியாது. 02.11.1978ம் தேதி 2ம் பிரதிவாதி மூக்கன் அம்பலத்திற்கு ராமன் அம்பலம் வகையறா தாவா 10வது அயிட்ட சொத்தை பொறுத்து கிரையம் செய்து கொடுத்த விபரம் எனக்கு தெரியும். மேற்படி ஆவணம் செல்லாது என நான் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் அது சம்பந்தமாக வழக்கு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. 13.06.1980ம் தேதி 2ம் பிரதிவாதி மூக்கன் அம்பலத்திற்கு எனது மனைவி நாச்சம்மாள் தாவா 1, 2 லக்க

சொத்தில் பாதியை கிரையம் செய்து கொடுத்த விபரம் எனக்கு தெரியும். அதற்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. 29.09.1980ம் தேதி 2ம் பிரதிவாதி மூக்கன் அம்பலத்திற்கு முருகன் அம்பலம் தாவா 1, 2 லக்க சொத்தின் மீதி பகுதியை கிரையம் செய்து கொடுத்த விபரம் தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்யும் முன்பு தெரியும். மேற்படி ஆவணம் செல்லாது என வழக்கில் எந்த பரிகாரமும் கோரப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்கள் கிரையம், செட்டில்மெண்ட் ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்டு அவர் பெயரில் பட்டா, கிஸ்தி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் ஆவணங்கள் அவர் பெயரில் உள்ளது ஆனால் அனுபவம் அவரிடத்தில் இல்லை. 25.07.1973ம் தேதி செட்டில்மெண்ட் ஆவணத்தை 16.12.2005ம் தேதி ரத்து செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. 24.07.1982ம் தேதி மூக்கன் அம்பலத்திற்கு முருகன் அம்பலம் வகையறா தாவா 3, 4, 10 லக்க சொத்துக்களை பொறுத்து கிரையம் பெற்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஈடு இலாப கடன் எழுதப்பட்ட 1970ம் ஆண்டுக்கு பின்பு ஒரு வருடத்திற்குள் மேற்படி கடன் கணக்கு கட்டி முடிக்கப்பட்டுவிட்டதால் தான் ஆறுமுகம் பிள்ளை தரப்பில் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அவர் நடவடிக்கை எடுத்தார். ஆறுமுகம் பிள்ளை நடவடிக்கை எடுத்தது சம்பந்தமாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஈடு லாப கடன் கட்டி முடிக்கப்பட்டுவிட்டதால் தான் பல்வேறு கிரையங்கள், செட்டில்மெண்ட் ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் 1973ம் ஆண்டு முதலே நடைமுறைக்கு வந்துவிட்டது என்றாலும் அதன் பிறகு 2ம் பிரதிவாதி மேற்படி ஆவணத்தின்படி சொத்தை கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள செல் ரசீது உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சொத்துக்கள் சம்பந்தமாக பல்வேறு ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட பிறகு செட்டில்மெண்ட் ரத்து செய்து செல் ரசீது ஏற்படுத்தப்பட்டது சட்டப்படி

செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக எனது மனைவி பெயரில் பட்டா மற்றும் ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். எனது மனைவி பெயரில் எந்த ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் 2ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றாலும், 2ம் பிரதிவாதியை அலைக்கழித்து சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக எனது மனைவியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
R VANJI NATHAN

**Principal District Munsif**
**Vedasandur**